ISSN : *2456-821X* அவையம் 1 (2) 2017 P.No. : *21 - 27*

புதிய அவையம்

# பத்துப்பாட்டில் நெய்தல் நில வழிபாடு

**பேரா. மு.ரோஸ்**

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர் - வேலூர்.*

***கட்டுரை பெறப்பட்டது: 20.11.2017*** ***ஏற்கப்பட்டது : 18.12.2017***

**முன்னுரை**

*நெய்தல் நிலத்தின் தெய்வம் வருணன். வருணன் என்பது மழைக்கடவுடைக் குறிக்கும். இதனை, 'வருணன் மேய பெருமணல் உலகமும்' (தொல். அகம். 5) என்று தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். அந்நிலத்தில் வாழும் மக்கள் நுளையர், திமிலர், பரதவர், நுளைத்தியர், பரத்தியர் ஆவர். பரதவர்கள் வருணனை வணங்கினாலும், கடற்கரைப் பகுதியில் நகரங்கள் அமைந்துள்ளதால், பல்வேறு இனம், மொழி, சமயம் போன்ற கலாச்சாரங்களால் பலவித தெய்வ வழிபாடுகள் அங்கு நிலவுகின்றன.*

*"குமரி நாட்டில் மாந்தன் மலைப்பகுதிகளில் முதலில் தோன்றி வளர்ந்த போது மேற்றிசைக் கடலே அருகிலிருந்தது. ஆதலால் கடல் தெய்வமாகிய வருணன் மேற்றிசைத் தெய்வமாக வணங்கப்பட்டான். தமிழர் கடலைச் சார்ந்து அதில் கலஞ்செலுத்தி வாழ்ந்த தொன்மையான வரலாற்றைச் சுட்டுவதாகும்.*

*பாம்பால் தீங்கு நேர்வதறிந்து அதனைத் தெய்வமாக வணங்கும் வழக்கம் வந்திருப்பது போன்றே கடலால் நேரும் துன்பம் கண்டு வருண வழிபாடு தோன்றியிருக்கக் கூடும். கடல்கோள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை உண்டாதலால் கடல்கோளுக்கு அஞ்சி வருணனை வழிபட்டனர் என்பதைவிட, கடலில் மீன்வேட்டத்தின் காரணமாகவும், கடற்பயணத்தின் காரணமாகவும் நேரும் துன்பங்களுக்கு அஞ்சி வருணன் வழிபாடு மேற்கொண்டனர் என்பதே பொருந்தும்" (இரா.மதிவாணன், கடல்கொண்ட தென்னாடு முதல் சிந்துவெளி வரை, ப.143).*

*நெய்தல் நிலத்தில் வாழும் மக்கள் பல்வேறு வழிபாட்டினை மேற்கொண்டுள்ளனர் என்பதை பின்வரும் கட்டுரை மூலம் அறியலாம்.*

*வேள்வி வழிபாடு*

பட்டினம், பாக்கம் போன்ற நகரங்களில் வாழும் பரதவ மக்கள், வேள்விச் செய்வதால் நன்மை அடைவோம் என்ற நம்பிக்கை கொள்கின்றனர். அந்நம்பிக்கைகள் பற்றியக் குறிப்புகள் பத்துப்பாட்டில் சில இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவைப் பின்வருமாறு,

இரையைத் தேடும் சிச்சிலி என்ற பறவையானது பெண்களின் மகரக்குழையைத் தன் இரை என எண்ணி எடுத்துக்கொண்டு, அந்தணர் வேள்விச் சாலையில் உள்ள வேள்வித் தூணில் போய் அமர்ந்தது (பெரும்பாண். 312-315)

காவிரிப்பூம்பட்டினத்தில், துறவிகள் தவம் புரியும், சமண பௌத்தப் பள்ளிகளிலும், முனிவர்கள் தங்கமிடத்திலும் வேள்வி செய்வதற்கென்றே இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வேள்வி செய்யும் போது அவ்வேள்வித் தீயில் நெய் முதலிய ஆவுதிப் பொருட்களை இடுகின்றனர். அதனால் நறுமணமுடைய புகையுண்டாகிறது. அப்புகையை வெறுத்த குயில்கள், தம்முடைய கருமையும் பெருமையும் உடைய பெண் இனத்துடன் அவ்விடத்தை விட்டு அகன்று சென்றது (பட்டி.53-56) என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறுகிறார்.

"கொலை கடிந்தும், களவு நீக்கியும்

அமரர்ப் பேணியும், ஆவுதி அருந்தியும்

நல் ஆனொடு பகடு ஓம்பியும்,

நான் மறையோர் புகழ் பரப்பியும்

பண்ணியம் அட்டியும், பசும்பதம் கொடுத்தும்,

புண்ணியம் முட்டாத் தண்நிழல் வாழ்க்கை" (பட்டி.199-204)

என்ற பதிவன் மூலம் கொலை, களவு முதலியத் தொழில்களை நீக்குவதற்காக, தேவர்களுக்குப் பலிமுதலியன தந்து வழிபட்டும், வேள்விகள் செய்து தெய்வங்கள் நுகரும்படி செய்யும் அந்தணர்களுக்கு நல்ல பசுக்களும், எருதுகளும் வழங்கவதால் தங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும் என்று நம்புகின்றனர். பசு, எருது போன்றவற்றைக் கொடுக்க இயலாதவர்கள், விளைந்த நல்ல நெல்லையும், பாக்கையும் உணவாகத் தருகிறார்கள். இவ்வாறு, தானம் செய்வதும், அறச்செயல்கள் புரிவதும் நன்மையைத் தரும் என்று நம்புகின்றனர் என்று அறியலாம்.

"சமண, புத்த சந்நியாசிகள் தங்கியிருக்கும் இடங்களுக்குப் 'பள்ளிகள்' என்று பெயர். அவர்கள் அப்பள்ளியில் இருந்துகொண்டு மக்களுக்குத் தங்கள் மதக்கொள்கைளை எடுத்துரைப்பார்கள். இதை ஒட்டித்தான் இப்பொழுது கல்வி போதிக்கும் இடங்களுக்கும் 'பள்ளி' என்ற பெயர் வழங்குகிறது. வடமொழி வேத முறைப்படி வேள்விச் செய்யும் ரிஷிகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் குடியேறியிருந்தனர் என்ற கருத்தை ஏற்றுக் கூறுகிறார்". (சாமி.சிதம்பரனார், பட்டினப்பாலை, பக்.36-37).

நகர மக்களின் வழிபாடு

*இம்மையிலும், மறுமையிலும் தோன்றும் காம இன்பங்களைப் பெறுவதற்குப் புகார் நகரில் உள்ள ஏரியில் மூழ்கி எழுந்தால் பல நன்மைகள் தோன்றும் என்பதனை,*

*'இருகாமத்து இணை ஏரி' (பட்டி.39)*

*என்ற பதிவின் மூலம் அறியலாம். இவ்விரு ஏரியைப் பற்றிச் சிலப்பதிகாரத்திலும் கூறப்பட்டுள்ளது. "காவிரிப்பூம் பட்டினத்திலே, சோம குண்டம், சூரிய குண்டம் என்று இரண்டு பெரிய நீர் நிலைகள் இருந்தனவாம். அவற்றிலே மூழ்கி அவற்றின் கரையில் உள்ள காமவேல் (மன்மதன்) கோட்டத்தை வணங்கும் தம்பதிகள் இம்மையின்பத்தைத் தவறாமல் துய்ப்பார்களாம். இறந்த பின்னும் சுவர்க்கத்திலே போய் இன்பந்துய்ப்பார்களாம். இது சிலப்பதிகாரத்திலே காணப்படுகிறது. பட்டினப்பாலையிலே குறிப்பிட்டுள்ள 'இருகாமத்து இணையேறி' என்பதும் இந்த இரண்டு 'குண்டங்'களைத்தான் குறிக்கின்றன என்று எண்ண இடமுண்டு" என்று கூறுகிறார். (சாமி.சிதம்பரனார், பட்டினப்பாலை, பக்.28-29).*

*இன்ப நுகர்வு மட்டுமல்லாது, தங்களது வாழும் காலத்தில் புகழ் நிலைபெற்றிருக்கவும், வாழ்க்கை சிறப்பாக அமையவும் 'உணவுச் சாலைகளை' ஏற்படுத்தி மக்களுக்கு தானமாக வழங்கினர். இம்மை வாழ்விற்கு ஏதுவாகிய புகழ் நிலைபெற்ற சொல், எங்கும் பரவி விளங்கவும், மறுமை வாழ்விற்கு ஏதுவாகிய அறம் நிலைபெற்று விளங்கவும், காவிரிப்பூம் பட்டினத்தில் அகன்ற உணவுச் சாலைகள் இருந்தன என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறுகிறார்.*

*"புகழ் நிலைஇய மொழி வளர*

*அறம் நிலைஇய அகன் அட்டில்*

*சோறு வாக்கிய கொழுங் கஞ்சி" (பட்டி.42-44)*

*மேற்காணும் இரண்டு கூற்றுகளும் நகரத்தில் வாழும் மக்களின் நம்பிக்கைகளாகும். புறச்சேரியில் வாழும் பரதவர்கள், காவிரி ஆறு கடலோடு கலக்குமிடத்தில் நீராடுவர். ஆவ்வாறு நீராடினால் தாங்கள் செய்யும் தீவினைகள் அனைத்தும் நீங்குவதாக நம்பினர். அவர்கள் கடல் நீரில் குளித்ததால் உடலில் உப்பு படிந்து இருக்கும். அவற்றை நீக்குவதற்கு நல்ல நீரில் நீராடுவர். இப்பதிவினை,*

*"மலி ஓதத்து ஒலி கூடல்*

*தீது நீங்க, கடல் ஆடியும்*

*மாசு போக புனல் படிந்தும்" (பட்டி.98-100)*

*என்ற பட்டினப்பலை அடிகள் மூலம் அறியலாம்.*

*பரதவர்களின் வழிபாடு என்பது, இயற்கை சூழலுக்கு ஏற்ப நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும். நகரங்களிலும், பட்டினங்களிலும் வெள;வேறு கடவுள்களையும், சமயத்தையும் பின்பற்றுபவர்களாக இருந்துள்ளனர் என்பதும், அந்தணர் வேள்விச் செய்தல், மறுபிறவி பற்றிய நம்பிக்கைகள் போன்றவை அக்காலத்தில் இருந்துள்ளன என்பதையும் அறியலாம்.*

முருகன் வழிபாடு

மேலும் புகார் நகரின் ஆவண வீதிகளில் விழாக்கள் நடந்துக் கொண்டே இருக்கும். அவ்விழாக்களின் போது மக்கள் தெய்வங்களைக் கைகூப்பி வணங்கி வழிபடுவர். முருகனுக்காக நடைபெறும் அவ்விழாவில் மகளிரொடு பொருத்தமுடையதாய் அமைந்து பல வாத்தியங்கள் முழங்குதல், புல்லாங்குழல் ஒலித்தல், யாழ் இசைத்தல், மத்தளம் அதிர்தல், முரசம் இயம்புதல் போன்ற காட்சிகள் பெரிய கடைவீதியில் உள்ளன.

ஒவ்வொரு இசைக்கருவியும் வெள;வேறு ஒலிகளில் ஒலிக்கின்றது என்று வேறுபடத்திக் காட்டும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் அறிந்து வைத்துள்ளார் என்பதை இதன் மூலம் அறியலாம்.

"செறிதொடி முன்கை கூப்பிச், செவ்வேள்

வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்

குழல் அதிர, முரசு இயம்ப

விழவு அறா, வியல் ஆவணத்து" (பட்டி. 154-158)

என்ற பாடலடிகளின் மூலம் குறிஞ்சி நிலக் கடவுளான முருகனை வழிபடுதலை அறிகிறோம். மேலும், தங்களுடைய இல்லுறை தெய்வத்தை மகிழ்விப்பதற்காக அக்கோயிலின் முன் கொடிகள் நடுவதற்கு முன், அவ்விடத்தில் உணவுப் பொருட்களையுடைய பெட்டியில், தாழ்போட்டுப் பத்திரமாக வைக்கப்பட்டிருந்த குளிர்ந்த பண்டங்களான தானியங்களை பரப்பி, அதன்மேல் வெண்மையான அரிசியைப் பலியாகச் சிதறுவர். பிறகு, பாகாகக் காய்ச்சி ஊற்றிய பசுமையான மெழுகால் பூசப்பட்ட இடத்தில் உறுதியான கொம்புகளை நட்டு அதில் கரும்பின் பூவினை ஒத்தத் துணியைக் கொடிகளாகப் பறக்கவிடுவர். இப்பதிவுகளை,

"மை அறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய

---------------- -------------- ------------- -----------

மேல் ஊன்றிய துகிற் கொடியும்" (பட்டி.159-168)

என்ற பாடலடிகளின் மூலம் அறியலாம்.

ஆவண வீதியில் செல்வம் அளவிடற்கரியதாய் இருப்பதற்கு தெய்வங்கள் துணைபுரிந்து பாதுகாப்பதாக, நம்பிக்கை வைத்துள்ளதை,

"செல்லா நல்இசை அமரர் காப்பின்

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும், (பட்டி. 184-185)

என்ற பதிவின் மூலம் அறியலாம்.

சுறாமீன் வழிபாடு

மேற்காணும் தெய்வங்கள் மட்டுமல்லாது, சிறப்பாக நடைபெறும் ஒரு வழிபாடு சுறா மீனின் கொம்பை நட்டு அதில் அணங்கை ஏற்றி வழிபடுவது ஆகும். இவ்வழிபாட்டினை கடைப்பிடிப்பவர்கள் பரதவர்கள் ஆவர். தங்களுடைய குடிசைகளுக்கு முன்னால் சுற்றத்தாருடன் ஒன்று கூடி இவ்வழிபாட்டினை மேற்கொள்வர்.

*"சினைச் சுறவின் கோடு நட்டு,*

*மனைச் சேர்த்திய வல் அணங்கினான்*

*மடல் தாழை மலர் மலைந்தும்,*

*புன்தலை இரும் பரதவர்" (பட்டி. 86-89)*

என்ற பாடலின் மூலம் அறியலாம். பரதவர்கள் அவ்வழிபாட்டின் பொழுது சினையாக இருக்கும், சுறாமீனின் கொம்பை நட்டு, அதில் வலிமையான தெய்வத்தை நிறுத்தி வழிபாடு செய்வர். பரதவர்கள் மீன் வேட்டையின் போது சுறாமீன்கள் அவர்களை தாக்கும் சக்தி உடையதாகக் கருதப்படுகிறது. ஆதிகாலத்தில் மக்களுக்கு இயற்கையால் துன்பப்படுகிறார்களோ அவற்றையே தங்களுடைய தெய்வமாக வணங்கும் பழக்கத்தை ஏற்றுக்கொள்கின்றனர். அதைப்போல கடலில், பல துன்பங்களுக்கு ஆளாவதால் சுறாக்கொம்பில் தெய்வத்தை ஏற்றி வணங்கும் வழக்கம் ஏற்பட்டது.

பரதவர்கள் முழுமதி நாளில் தங்கள் தொழிலுக்குச் செல்லாமல், தம் மனைவியருடனும், சுற்றாத்தாருடனும் ஒன்று கூடி விளையாடுவர். உவா நாளை 'பௌர்ணமி' என்றும், மீன் வேட்டைக்குச் செல்லாமல் இருக்கும் நாளில், கடலில் சென்று விளையாடுவதால், 'கடல் வேட்டம்' என்றும் அழைக்கப்படுவதை அறியலாம்.

"பொதுவாகத் தாக்கித் துன்புறுத்தும் இயல்பினதாகக் கூறப்படும் அணங்கு சங்க இலக்கியங்களில் பல இடங்களில் குறிப்பிடப்படுகிறது. அணங்கு என்பது ஒர் அமானுஷ்யமான சக்தி, விலங்கு சாராத இயற்கை இறந்த ஆற்றல், அது கடல், மலை, காடு, ஆறு, ஏனைய நீர்நிலைகளில் உறைவது என்றும் தீண்டித் துன்புறுத்தும் ஆவியாகவும் பண்டைக் காலத்தில் நம்பப்பட்டது என்று அணங்கு பற்றிக் கூறுகிறார். (ஆ.தனஞ்செயன், சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலியலும், ப.68).

அவர்கள் வழிபாடு முடிந்த பிறகு விழுதுகளைக் கொண்ட தாழையின் அடிப்பகுதியில் வளர்ந்துள்ள, வெண் கூதாளியின் குளிர்ந்த பூக்களால் ஆகிய மாலையை அணிந்து கொண்டு, மடல் நிறைந்த தாழை மலரையும் சூடுவர். மேலும் பனை மரத்திலிருந்து எடுக்கப்பட்ட கள்ளினையும், நெல்லில் இருந்து ஆக்கப்பட்ட கள்ளினையும் உண்டு விளையாடுவார்கள் என்ற பதிவினையும் இதன் மூலம் அறியலாம்.

நடுகல் வழிபாடு

*"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்*

*சீர்த்த மரபில் பெரும்படை வாழ்த்தலென்று*

*இருமூன்று மரபிற் கல்லொடு" (தொல். 63:19-21)*

என்ற தொல்காப்பிய நூற்பாவில் நடுகல்லைப் பற்றிய குறிப்பின் மூலம் அறியலாம். போர்க்காலத்தில் விழுப்புண்பட்டு வீர மரணம் அடைந்த வீரனின் நினைவாக அமைக்கப்படுவது 'நடுகல்' ஆகும்.

"இக்காலத்தில் வழக்கத்திலிருக்கும் மதுரை வீரன், குதிரை வீரன், முனியன், நொண்டி, இருளன், கருப்பன் முதலிய சிறு தெய்வங்கள் நடுகல்லின் உருமாறிய அல்லது வளர்ச்சி பெற்ற நிலையின எனக் கூறலாம். ஊர் மன்றங்களில் உள்ள கற்களில் கடவுள் உறைவதாக நம்பி அக்கற்களுக்கு வழிபாடுகளும் நடைபெற்றன." (அரங்க. இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், ப.59).

போர்க்களத்தில் இறந்த, வீரனுக்கு ஏற்ற கல்லைத் தேர்ந்தெடுத்து, நீராட்டி நடுவர். நடப்பட்ட கல்லுக்குப் பலியிடுதல், வெற்றிச் செயல்களை செதுக்குவது, விழா எடுத்து வழிபடுவது போன்ற செயல்களைச் செய்வர். நடுகல்லைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் இடம் பெற்றுள்ளன.

"கிடுகு நிரைத்து எஃகு ஊன்றி,

நடு கல்லின் அரண் போல

நெடுந்தூண்டிலில் கால் சேர்த்திய" (பட்டி.78-80)

என்ற பாடலடிகளில் பரதவர்களின் குடில்களை ஒப்பட்டு கூறுமிடத்தில் இடம்பெற்றுள்ளது. நடுகல்லில் தெய்வமாக இருக்கும் ஒருவனுக்கு வைக்கப்பட்டுள்ள கல்லைச் சுற்றி கேடயங்களை வேலிபோல வரிசையாக வைக்கப்பட்டுள்ளது. அவற்றைத் தாங்கும் பொருட்டு, அவ்விடத்தைச் சுற்றி வேல்கள் ஊன்றபெற்றிருக்கும். அதுபோல பரதவர்களின் குடில்களைச் சுற்றிலும் மீன்பிடிக்கப் பயன்படுத்தும் நீண்ட தூண்டில்களைச் சார்த்தி வைக்கப்பட்டுள்ள என்று பட்டினப்பாலையில் உள்ள நடுகல்லைப் பற்றிய பதிவுகள் ஆகும்.

முடிவுரை

சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர், பௌர்ணமி நாளை 'உவாநாள்' என்று அழைத்தனர். அந்நாளில் அவர்கள் 'கடல்வேட்டம்' என்னும் மீன்வேட்டைக்குச் செல்லாமல், குழுவாக இணைந்து சுறா முள்ளில் அணங்கை ஏற்றி வழிபடும் சடங்கினைச் செய்வர்.

நெய்தல் நிலத்தின் தெய்வம் வருணன், கடலில் சுறா போன்ற கொடிய மீன்களாலும், கடல்கோளாலும், வாணிபம் செய்ய கடற்பயணத்தின் போதும் ஏற்படும் துன்பங்களுக்கு அஞ்சி கடலை வழிபடுவர். பரதவர்கள், வணிகர்கள் முதலானோர், அந்தணர்களைக் கொண்டு வேள்விச் செய்தல், அதற்கு பதிலாக பசு, எருது, நெல், பாக்கு முதலியவை அவர்களுக்கு தானமாகத் தருவர். காவிரியாறு கடலோடு கலக்குமிடத்தில் நீராடினால், தாங்கள் செய்யும் தீவினைகள் அனைத்தும் நீங்குவதாக நம்பினர்.

நடுகல்லில் தெய்வமாக இருக்கும் ஒருவனுக்கு கேடயம், அம்பு முதலியவற்றை வைத்து வழிபடுவது போல் பரதவர்களுடைய குடிசைகள் அமைந்துள்ளன.

துணைநூற் பட்டியல்

1. வே.சாமிநாதையர், பத்துப்பாட்டு, மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும், முதற்பதிப்பு: 1889, ஏழாம் பதிப்பு: 1974.

2. நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் (பொருளதிகாரம்), கழக வெளியீடு, முதற்பதிப்பு: மார்ச் 1966, மறுபதிப்பு: சூலை 1977.

3. இரா. மதிவாணன், கடல் கொண்ட தென்னாடு முதல் சிந்துவெளி வரை, முதற்பதிப்பு: திசம்பர் 2001.

4. சாமி. சிதம்பரனார், பட்டினப்பாலை (ஆராய்ச்சி உரை), முதற்பதிப்பு: ஜனவரி 1967.

5. ஆ. தனஞ்செயன், சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலியலும், முதற்பதிப்பு: ஜுலை 2010.

6. அரங்க. இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், முதற்பதிப்பு: டிசம்பர் 1987.